செய்தி வெளியீடு எண்:700 நாள் :28.12.2015

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (28.12.2015) தலைமைச் செயலகத்தில், வருவாய்த் துறையின் சார்பில் 55 கோடியே 32 லட்சத்து 64 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 16 கோடியே 22 லட்சத்து 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை ஆட்சியர்களுக்கான குடியிருப்பு கட்டடங்கள், நில அளவை மற்றும் நிலவரி திட்டத் துறை இயக்குநரக இணைப்பு அலுவலகக் கட்டடம், வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள், வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள், கிராம நிர்வாக அலுவலகக் கட்டடங்கள், அரசு விருந்தினர் இல்லம், மனுக்கள் மையம், அலுவலர்கள் குடியிருப்புகள் ஆகியவற்றை திறந்து வைத்து, புதிய ஐந்து வட்டங்களை துவக்கி வைத்தார்கள்.

அரசின் மக்கள் நலத் திட்டங்களை ஏழை எளிய மக்களிடையே முறையாக கொண்டு சென்று அரசுக்கும் மக்களுக்கும் பாலமாக விளங்கும் வருவாய்த் துறையின் மேம்பாட்டிற்காக, புதிய வருவாய் வட்டங்களை உருவாக்குதல், வருவாய்த்துறைக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டுதல், அலுவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், திருப்பூர் மாவட்டம் – திருப்பூர் தெற்கு வட்டம், வீரபாண்டி கிராமத்தில் 3,81,901 சதுர அடி கட்டட பரப்பளவில், 55 கோடியே 32 லட்சத்து 64 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் தரைத் தளம் உள்ளிட்ட எட்டு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள். இந்த பெருந்திட்ட வளாகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், 40 துறைகளுக்கான அலுவலக அறைகள், 2 பெரிய மற்றும் 2 சிறிய கூட்டரங்குகள், விருந்தினர் மாளிகை, மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, மாவட்ட வருவாய் அலுவலர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, திட்ட

அலுவலர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்பு, அலுவலர்களுக்கான குடியிருப்புகள், பொது மக்களுக்கான காத்திருப்புக் கூடம், குடிநீர் வசதி, மின் தூக்கி வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு வசதி, உணவகக் கட்டடம், வாகனங்கள் நிறுத்துமிடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. இப்பெருந்திட்ட வளாகமானது பொதுமக்கள் எளிதில் வந்து செல்வதற்கு வசதியாகவும், அனைத்து துறைகளைச் சார்ந்த அலுவலர்களை ஒரே இடத்தில் சந்தித்து தங்களது தேவைகளை பூர்த்தி செய்ய ஏதுவாகவும் உள்ளது.

மேலும், வேலூர் மாவட்டம் – ஆம்பூர், திருப்பூர் மாவட்டம் – மடத்துக்குளம் ஆகிய இடங்களில் 4 கோடியே 4 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்; திருநெல்வேலி மாவட்டம் – கீழப்பாவூர், இராமநாதபுரம் மாவட்டம் – எஸ். தரக்குடி, அரியலூர் மாவட்டம் – செந்துறை, ஜெயங்கொண்டம் மற்றும் சுத்தமல்லி, நாமக்கல் மாவட்டம் – நாமகிரிப்பேட்டை, கரூர் மாவட்டம் – கே. பரமத்தி ஆகிய இடங்களில் 1 கோடியே 19 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வருவாய் ஆய்வாளர் அலுவலகங்கள் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள்;

காஞ்சிபுரம் மாவட்டம் – பல்லாவரம், அரியலூர் மாவட்டம் – கூவாத்தூர் (வடக்கு) மற்றும் கத்தாஹர் (வடக்கு), சேலம் மாவட்டம் – சிங்கிபுரம், காட்டுவேப்பிலைப்பட்டி, சிவதாபுரம், கருமாபுரம், போடிநாயக்கன்பட்டி, கல்பாரப்பட்டி, எஸ். அம்மாப்பாளையம், கரூர் மாவட்டம் – கே.பேட்டை, விருதுநகர் மாவட்டம் – போடம்பட்டி, செட்டிக்குறிச்சி, வக்கனகுண்டு, திருவள்ளூர் மாவட்டம் – மாதவரம், சினக்காவனம்–I, சினக்காவனம்–II, கொரட்டூர், கத்திவாக்கம், எர்ணாவூர், சாத்தான்காடு, மணலி, பொன்னேரி ஆகிய இடங்களில் 1 கோடியே 96 லட்சத்து 35 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 23 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களுடன் கூடிய குடியிருப்பு கட்டடங்கள்;

சிவகங்கை மாவட்டம் – சிவகங்கையில் 96 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துணை ஆட்சியர்களுக்கான 4 குடியிருப்பு கட்டடங்கள்; திருவாரூர் மாவட்டம் – முத்துப்பேட்டையில் 90 லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு விருந்தினர் இல்லம்; மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 29 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மனுக்கள் பெறும் மையம் மற்றும் தகவல் மையம்; திருப்பூர் – எல்.ஆர்.ஜி. நாயுடு அரசு மகளிர் கல்லூரியில்

2 கோடியே 64 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள், அலுவலர்கள் குடியிருப்பு, கணினி அறை, கழிப்பறைகள்;

சென்னை–சேப்பாக்கத்தில் 2 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நில அளவை மற்றும் நிலவரித் திட்டத் துறை இயக்குநரக அலுவலக இணைப்புக் கட்டடம்; தருமபுரி, திருப்பூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, பெரம்பலூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை, மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை ஆகிய மாவட்டங்களில் 2 கோடியே 3 லட்சத்து 36 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள குறுவட்ட நில அளவருக்கான 16 குடியிருப்புகளுடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள்;

என மொத்தம் 71 கோடியே 55 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான வருவாய் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

திருவள்ளூர் மாவட்டம் – ஆவடி, கிருஷ்ணகிரி மாவட்டம் – பர்கூர், புதுக்கோட்டை மாவட்டம் – விராலிமலை, விருதுநகர் மாவட்டம் – வெம்பக்கோட்டை, திருநெல்வேலி மாவட்டம் – திருவேங்கடம் ஆகிய ஐந்து புதிய வருவாய் வட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு.எம்.எஸ்.எம். ஆனந்தன், மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு.தோப்பு என்.டி. வெங்கடாசலம், தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தின் தலைவர் திரு உடுமலை கே. ராதாகிருஷ்ணன், தலைமைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), வருவாய்த் துறைச் செயலாளர் திரு. இரா. வெங்கடேசன், இ.ஆ.ப., முதன்மை செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.
நாள் : 28.12.2015